DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 200/2022

Prosecution PW

Deposition of Witness for Defence

Court

Name : சந்திரசேகர்

Father's Name : நடராஜன்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.02.2026.

**1,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடியிருந்து கொண்டு தற்சமயம் கரூர் பஸ்டாண்ட் அருகிலுள்ள பாலாஜி மெஸ்சில் கேசியராக பணிபுரிந்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு கரூர் நகர காவல்

நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள். அங்கு என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். எழுதாத வெள்ளை தாளில் நான் கையொப்பம் செய்தேன். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜரில்லாத எதிரியும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் கடந்த 24.07.2020 அன்று இரவு 09.00 மணியளவில் நான் பாலாஜி மெஸ் ஹோட்டலுக்கு வெளியே நின்றுகொண்டிருந்தபோது 3 நபர்கள் வந்து ஹோட்டல் இருக்கா என்று கேட்டதாகவும், லாக்டவுன் என்பதால் கடையை சாத்திவிட்டோம் என்று நான் சொன்னதாகவும், அப்போது திடீரென அவர்களில் இரண்டு நபர்கள் மறைத்து வைத்திருந்த இரண்டு இரும்பு கத்தியை எடுத்து ஒருவர் எனது வலது பக்க கழுத்திலும், இன்னொருவர் இடது பக்க கழுத்திலும் வைத்து பணத்தை கேட்டு மிரட்டியதாகவும், அதற்கு நான் எதற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னதற்கு வலது பக்க கழுத்தில் கத்தியை வைத்திருந்தவன் தன் பெயர் சூர்யபிரகாஷ் என்றும், இடது பக்க கழுத்தில் கத்தியை வைத்திருந்தவன் தன் பெயர் முருகன் என்றும், பக்கத்தில் நிற்பவன் சீனிவாசன் என்றும் கூறி தங்களது பெயர்களை கேட்டால் கரூரில் எல்லாரும் பயந்து ஓடுவார்கள் என்றும், அப்போது சீனிவாசன் சூர்யாவிடம் கத்தியால் குத்துடா அப்போதுதான் பணம் கொடுப்பான் என்று மிரட்டியதாகவும், அதனால் நான் பயந்து பாக்கெட்டில்

வைத்திருந்த ரூ.700/- சீனிவாசனிடம் கொடுத்தாகவும், பணத்தை வாங்கிக்கொண்டு மூவரும் வெளியே சொன்னால் கொலை செய்துவிடுவதாக மிரட்டிவிட்டு கத்தியுடன் ஓடிவிட்டதாகவும், இரவு நேரம் என்பதால் மறுநாள் காலையில் சென்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**